## இன்றைய வேளாண் செய்திகள்

**<u>தமிழகத்தில் மழை தொடரும்: வானிலை ஆய்வு மையம் தகவல்</u>**




வங்கக் கடலில் இரண்டு இடங்களில் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலைகள் உருவாகியுள்ளதால், தமிழகத்தில் மழை தொடரும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வங்கக் கடலில் கடந்த 3 நாள்களுக்கு முன்பு உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலையால், கடந்த 2 நாள்களாக மழை பெய்து வருகிறது. இந்த நிலையில் மேலும் ஒரு காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகியுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. இது குறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் கூறியது: வங்கக் கடலில் கடந்த 3 நாள்களுக்கு முன்பு குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவானது. இந்த காற்றழுத்த தாழ்வு நிலை இலங்கை, தமிழகம், தெற்கு ஆந்திரம் ஆகியவற்றின் கடற்கரையை ஒட்டியுள்ள கடல் பகுதியில் நிலை கொண்டுள்ளது. இந்த காற்றழுத்த தாழ்வு நிலையின் காரணமாக மழை பெய்து வருகிறது. மேலும் இந்த மழை மேலும் சில நாள்களுக்கு தொடரும். ஆனால் இந்த காற்றழுத்த தாழ்வு நிலை வலுப்பெறாது. புதிய தாழ்வு நிலை: வங்கக் கடலில் அந்தமான் தீவுகளுக்கு அருகில் புதிய குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை ஞாயிற்றுக்கிழமை காலை உருவாகியுள்ளது. இந்த காற்றழுத்த தாழ்வு நிலை, காற்றழுத்த தாழ்வுப் பகுதியாக வலுவடைய வாய்ப்புள்ளது. இந்த புதிய காற்றழுத்த தாழ்வு நிலையின் காரணமாகவும் மழை பெய்யும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். வானிலை முன்னறிவிப்பு: தமிழகம்,

புதுவையின் சில இடங்களில் கனமழை பெய்யும். சென்னையை பொருத்தவரையில் வானம் மேகமூட்டமாக இருக்கும். சில இடங்களில் மழை பெய்யும். ஞாயிற்றுக்கிழமை காலை வரையிலான 24 மணி நேரத்தில் மதுரை, ஸ்ரீவில்லிபுத்தூரில் 130 மி.மீ. மழை பெய்துள்ளது. சிவகாசியில் 110 மி.மீ. மழையும், பேரையூரில் 90 மி.மீ. மழையும் பெய்துள்ளது. திருமங்கலம், திருச்சுழி (80 மி.மீ.), கூடலூர், ஊட்டி (70 மி.மீ.), அருப்புக்கோட்டை (60 மி.மீ.), தேவக்கோட்டை, சாத்தூர், சிதம்பரம், விருதுநகர் (50 மி.மீ.)

## முல்லைப் பெரியாறு அணையில் கூடுதல் தண்ணீர் திறப்பு: வைகை அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு

முல்லைப் பெரியாறு அணை நீர்ப்பிடிப்புப் பகுதியில் தொடர்ந்து மழை பெய்து வருவதால் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி முதல் அணையில் இருந்து திறக்கப்படும் தண்ணீரின் அளவு விநாடிக்கு 1,756 அடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனால், வைகை அணைக்கு தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது. தேனி மாவட்டத்தில் பரவலாகவும், முல்லைப் பெரியாறு அணை நீர்ப்பிடிப்பு பகுதியிலும் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. முல்லைப் பெரியாறு அணைக்கு நீர்வரத்து அதிகரித்து, கடந்த அக்டோபர் 30-ஆம் தேதி அணை நீர்மட்டம் 136 அடியை எட்டியது. அக்டோபர் 31-ஆம் தேதி அணை நீர்மட்டம் 136.60 அடியாக உயர்ந்தது. அணைக்கு நீர்வரத்து விநாடிக்கு 1,916 கன அடியாக இருந்தது. அணையில் இருந்து தமிழக பகுதிக்கு விநாடிக்கு 456 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டது. கடந்த 1979, நவம்பர் 13-ஆம் தேதிக்குப் பின்பு, அக்டோபர் 31-ஆம் தேதி பெரியாறு அணையில் 136 அடிக்கு மேல் தண்ணீர் தேக்கப்பட்டதால் பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்தனர். அணையில் போதிய தண்ணீர் இருப்பில் உள்ளதால் வரும் ஜூலை மாதம், முதல் போக நெல் சாகுபடிக்கு தண்ணீர் பற்றாக்குறை ஏற்படாது என்று விவசாயிகள் தெரிவித்தனர். இந்தநிலையில், பெரியாறு அணையில் இருந்து தமிழக பகுதிக்கு திறக்கப்படும் தண்ணீரின் அளவு

ஞாயிற்றுக்கிழமை(நவ.2) காலை 10 மணி முதல் விநாடிக்கு 1,756 கன அடியாக அதிகரிக்கப்பட்டது. அணைக்கு விநாடிக்கு 2,496 கன அடி தண்ணீர் வரத்து உள்ளது. பெரியாறு அணையின் நீர்மட்டம் 142 அடியை எட்டும் என ஆவலுடன் எதிர்பார்த்திருந்த விவசாயிகள், அணையில் இருந்து கூடுதலாக தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளதால் ஏமாற்றமடைந்துள்ளனர். பெரியாறு அணை நீர்ப்பிடிப்பில் தொடர்ந்து மழை பெய்து வருவதாலும், கன மழை நீடிக்கும் என்று எதிர்பார்க்கப் படுவதாலும் அணையில் இருந்து தமிழக பகுதிக்கு கூடுதலாக தண்ணீர் திறக்கப்பட்டுள்ளதாக பொதுப் பணித் துறை அதிகாரிகள் கூறினர்.

வைகை அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு: மாவட்டத்தில் பரவலாக மழை பெய்து வருவதாலும், பெரியாறு அணையில் இருந்து கூடுதலாகத் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளதாலும் முல்லைப் பெரியாற்றில் நீர்வரத்து அதிகரித்து வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது. வைகை அணைக்கு தண்ணீர் வரத்து அதிகரித்து அணை நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.

வைகை அணை நீர்மட்டம் ஞாயிற்றுக்கிழமை 52.82 அடியாகவும், அணைக்கு நீர்வரத்து விநாடிக்கு 1,170 கன அடியாகவும் இருந்து. அணையில் இருந்து பாசனம் மற்றும் குடிநீர் திட்டங்களுக்கு விநாடிக்கு 1,660 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

## <u>அருப்புக்கோட்டையில் 58 மி.மீ. மழை</u>

அருப்புக்கோட்டை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் சனிக்கிழமை இரவு கன மழை பெய்தது. பிறகு விடிய விடிய சாரல் மழையாக தொடர்ந்து பெய்து கொண்டே இருந்தது. மழையளவு 58 மி.மீ. ஆகப் பதிவானதாக அருப்புக்கோட்டை தாலுகா அலுவலக செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணி முதல் கன மழை பெய்தது. இதனால் அருப்புக்கோட்டையின் பெரிய கண்மாய் நிரம்பி வருகிறது.

**<u>தேவையான உரங்கள் இருப்பு: வேளாண்மை இணை இயக்குநர் தகவல்</u>**

ராமநாதபுரம் மாவட்டத்தில் விவசாயப் பணிகள் தீவிரமடைந்துள்ள நிலையில் விவசாயிகளுக்கு தேவையான அனைத்து வகை ரக உரங்களும் இருப்பு வைக்கப்பட்டிருப்பதாக வேளாண்மை இணை இயக்குநர் நா.வீ.கிருஷ்ணமூர்த்தி சனிக்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார். செய்திக்குறிப்பு. ராமநாதபுரம் மாவட்டத்தில் விவசாயப் பணிகள் தீவிரமடைந்திருப்பதைத் தொடர்ந்து விவசாயிகள், உரம் இடும் பணியினை மேற்கொண்டு வருகின்றனர். விவசாயிகளுக்கு தங்கு தடையின்றி உரிய நேரத்தில் ரசாயன உரங்கள் கிடைத்திட மாவட்ட நிர்வாகம் அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது. மாவட்ட ஆட்சியர் க.நந்தகுமார் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்களில் உரங்கள் போதுமான அளவுக்கு இருப்பு வைக்க தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அரசு நிர்ணயித்த விலையில் விவசாயிகளுக்கு உரங்கள் கிடைத்திட வேளாண்மைத்துறை அலுவலர்கள் அவ்வப்போது, உரக்கடைகளை ஆய்வு செய்து வருகின்றனர். ஆர்.எஸ்.மங்கலம் மற்றும் திருவாடானை வட்டாரம் உள்பட மாவட்டம் முழுவதும் உள்ள உரக்கடைகளை ஆய்வு செய்ய கண்காணிப்புக்குழுவும் அமைக்கப்பட்டுள்ளது. இந்த ஆய்வின்படி உரக்கட்டுப்பாட்டு சட்டம் 1985 விதிமுறைகளை மீறிய உர விற்பனையாளர்களுக்கு விளக்கம் கேட்டு நோட்டீசும், இரு உர விற்பனையாளர்களின் உர உரிமம் தாற்காலிகமாக நிறுத்தியும் வைக்கப்பட்டுள்ளது. நடப்பு பருவத்தில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்களில் 1460 மெ.டன் யூரியாவும், 395 மெ.டன் டி.ஏ.பி.யும், 31.மெ.டன் பொட்டாஷ் உரமும், 467மெ.டன் என்.பி.கே. கலப்பு உரங்களும், டான்பெட் நிறுவனத்தின் மூலமாக ராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்களில் இருப்பு வைக்கப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.இதுபோக கூடுதலாக இன்னும் இரு நாள்களில் யூரியா 400

மெ.டன்னும், டி.ஏ.பி.500 மெ.டன்னும், என்.பி.கே.கலப்பு உரம் 500 மெ.டன்னும் வரவுள்ளன. தற்போது, தனியார் மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்களில் யூரியா 1079 மெ.டன், டி.ஏ.பி.998மெ.டன், பொட்டாஷ் 153டன், என்.பி.கே.கலப்பு உரங்கள் 942 மெ.டன் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. எனவே விவசாயிகள் தங்களுக்கு தேவையான உரங்களை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு சங்கங்களிலும்,தனியார் உரக்கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.

நவம்பர் மாதத்திற்கு தேவையான உரங்கள் சம்பந்தப்பட்ட உர உற்பத்தி நிறுவனங்களிடமிருந்து இம்மாவட்டத்திற்கு அனுப்பிடத் தேவையான அனைத்து முன் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் நா.வீ.கிருஷ்ணமூர்த்தி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மானாவாரியில் குதிரைவாலி சாகுபடி: வேளாண் துறையினர் விளக்கம்**

சத்திரக்குடி பகுதியில் பெரும்பாலான விவசாய நிலங்களில் நெல் மற்றும் சிறு, குறு தானியங்கள் மானாவாரியாகவே சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன. இதில் வேளாண் துறையினர் விவசாயிகளுக்கு குதிரைவாலி சாகுபடி செய்வது குறித்து திடல் அமைத்து விளக்கமளித்து வருகின்றனர்.

நெல் சாகுபடியில் செலவினை குறைக்க தொழில் நுட்பங்களை பயன்படுத்தி அதிக மகசூல் கிடைக்கச் செய்வதுபோல், மழை குறைந்த நிலையில் நெல் சாகுபடிக்கு அடுத்ததாக குதிரைவாலி சாகுபடி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. வேளாண்மை உதவி இயக்குநர் ஆர். சுருளிமலை, விவசாயிகளிடம் கோ- 2 குதிரைவாலி மற்றும் வீரிய ஒட்டு ரகமான மனிஷா 7272 விதைகளை வழங்கி அதிக மகசூல் பெறுவது குறித்து விளக்கமளித்தார். இச்சாகுபடியின் தொழில் நுட்பம் குறித்து வேளாண் தொழில் நுட்ப மேலாளர் க. சுகன்யா கூறியது: வறட்சிக் காலங்களில் மாற்றுப் பயிராகவும், குறைந்த தண்ணீரை பயன்படுத்தியும் குதிரைவாலி சாகுபடி செய்திட முடியும். மானாவாரி சாகுபடியாக சிறுதானிய வகையைச் சேர்ந்த மக்காச்சோளம், கம்பு,

கேழ்வரகு போன்றவையும், குறுதானிய வகையான சாமை, வரகு, குதிரைவாலியும் பயிர் செய்யப்பட்டு வருகிறது. இதில் இங்குள்ள மண் வளத்துக்கு ஏற்ப குதிரைவாலி சாகுபடியை அதிகம் பயிரிட்டு கூடுதல் மகசூல் பெற்று விவசாயிகள் லாபம் ஈட்டலாம். குதிரைவாலி சாகுபடியில் ஒரு ஏக்கருக்கு 24 கிலோ விதைப்புச் செய்தால் 600 முதல் 800 கிலோ வரை மகசூல் கிடைக்கும். தற்போது குதிரை வாலி கிலோ ரூ.20 முதல் ரூ.25 வரை விற்பனை செய்யப்படுகிறது. ஆகையால் ஏக்கருக்கு செலவிட்டது போக ரூ.20 ஆயிரம் வரை வருமானம் ஈட்ட முடியும். இதனை விவசாயிகள் நல்லமுறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என அவர் தெரிவித்தார்.

**"அம்மா' பண்ணை மகளிர் குழு தொடக்கம்**

சேலம் மாவட்டத்தில் வேளாண்மையில் பெண்களின் பங்களிப்பை அதிகரிக்கும் வகையில் "அம்மா' பண்ணை மகளிர் குழு தொடங்கப்பட்டுள்ளது. இதற்கான ஆலோசனைக் கூட்டம் காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்திற்கு தலைமை வகித்து, காடையாம்பட்டி வட்டார வேளாண்மைத்துறை உதவி இயக்குநர் அ.நாசர் பேசியது:

தமிழக அரசின் உத்தரவின்படி காடையாம்பட்டி வட்டாரத்தில் வேளாண்மையில் பெண்களின் பங்களிப்பை ஊக்குவிக்கும் பொருட்டு, பெண் விவசாயிகளைக் கொண்டு "அம்மா'பண்ணை மகளிர் குழுக்கள், தின்னப்பட்டி, பெரியப்பட்டி ஊராட்சிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்தக் குழுவில் 20 முன்னோடி பெண் விவசாயிகள் அங்கத்தினராக இருப்பர். அவர்களிலிருந்து தலைவர், செயலர், பொருளாளர் தேர்ந்தெடுக்கப்படுவர். இந்தக் குழுவின் கூட்டம் பிரதிமாதம் குறிப்பிட்ட நாளில் நடைபெறும். செயலர், பொருளாளர் பெயரில் தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் சேமிப்பு கணக்கு தொடங்கப்பட்டு இக்குழு செயல்படும். இந்தக் குழுவின் திறனை ஊக்குவிக்கும் பொருட்டு திறன் மேம்பாட்டு பயிற்சி முகாம் தொடர்ச்சியாக நடத்தப்படும் என்றார் அவர்.

துணை வேளாண்மை அலுவலர் பு.ரவிக்குமார் பண்ணை மகளிர் குழுவின் பணிகள் பற்றியும், பதிவேடுகள் பராமரிப்பு பற்றி தன்னார்வத் தொண்டு நிறுவனத்தைச் சார்ந்த பயிற்றுனர் எஸ்.தேவகியும், பட்டுபுழு வளர்ப்பின் பயன்கள் பற்றி பட்டுவளர்ச்சித் துறை உதவி ஆய்வாளர் செல்வராஜும் விளக்கிக் கூறினர். இந்த நிகழ்ச்சியில் வேளாண்மை அலுவலர் மு.சம்பத்குமார், உதவி வேளாண்மை அலுவலர்கள் சி.ஞானஜோதிமுருகன், க.புனிதராஜ், மா.நடராஜன், ப.தண்டபாணி, ரா.முத்துசாமி, அட்மா திட்ட அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## <u>எட்டயபுரம் பகுதியில் தொடர் மழை</u>

எட்டயபுரம் பகுதியில் சனிக்கிழமை இரவில் திடீரென மழை பெய்தது.

எட்டயபுரம் பகுதியில் சில நாள்களாகவே பகல் நேரங்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. இந்நிலையில் சனிக்கிழமை இரவு சுமார் 10 மணியளவில் இடி,மின்னலுடன் பரவலாக மழை பெய்யத் தொடங்கியது. சுமார் ஒரு மணிநேரம் பெய்த மழை காரணமாக தெருக்களில் மழை நீர் பெருக்கெடுத்து ஓடியது. ஞாயிற்றுக்கிழமை அதிகாலை வரையில் லேசான மழை பெய்தது. இதனால் அப்பகுதி பொதுமக்கள், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

## மழையால் பாதித்த நெற்பயிர்கள்: விவசாயிகளுக்கு வேளாண்துறை அறிவுரை

கோபி : மழையால் பாதித்த நெற்பயிர்கள் காக்க, வேளாண்மை துணை அதிகாரி கோபி பகுதி விவசாயிகளுக்கு யோசனை தெரிவித்துள்ளார். கன மழையால் தடப்பள்ளி வாய்க்கால் பாசனப்பகுதியில் சாகுபடி செய்திருந்த நெல் வயல்களில் தண்ணீர் தேங்கியும், நெற்பயிர்கள் தலைகுணிந்து நிற்கின்றன. மகசூல் இழப்பை தவிர்க்க, வேளாண்மை துறை உதவி இயக்குநர் வாசுதேவன், கோபி பகுதி விவசாயிகளுக்கு அறிவுரை வழங்கியுள்ளார். அவர் கூறியதாவது:மழைநீர் சூழ்ந்துள்ள வயல்களில் உடனடியாக வடிகால் வசதி ஏற்படுத்தி, நீரினை வெளியேற்றி காற்றோட்டம் கிடைக்க செய்ய வேண்டும். சமீபத்தில் நடவு செய்யப்பட்ட பயிர்கள் கரைந்து போன இடங்களில், நாற்றாங்களில் மீதமுள்ள நாற்றுக்களை பயன்படுத்த நடவு செய்ய வேண்டும்.நடவு பயிர்கள் முழுமையாக அழுகியிருக்கும் பட்சத்தில், குறுகிய கால நெல் ரகங்களை நாற்று விட்டோ அல்லது நேரடி ஈர விதைப்பு செய்யவோ வேண்டும். நீரில் மூழ்கிய பயிரில் ஊட்டசத்துக்கு பற்றாக்குறை தென்பட வாய்ப்புள்ளது. இதனை நிவர்த்தி செய்ய ஏக்கருக்கு 22 கிலோ யூரியா, ஜிப்சம் 18 கிலோவுடன், நான்கு கிலோ வேப்பம் புண்ணாக்கை கலந்து, ஒரு இரவு முழுவதும் தண்ணீர் வடிந்தவுடன் வயலில் இடவும்.சூரிய வெளிச்சம் தென்பட்டவுடன், ஏக்கருக்கு இரண்டு கிலோ யூரியாவுடன், ஒரு கிலோ ஜிங்க் சல்பேட் உரங்களை, 200 லிட்டர் தண்ணீரில் கரைத்து, கைத்தெளிப்பான் மூலம் இலை வழி உரமாக தெளிக்கவும்.மழைநீர் பாதித்த இளம் பயிரில் கூண்டு புழுவும், வளர்ந்த பயிரில் இலை சுருட்டு புழுவின் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. இதை கட்டுப்படுத்த, இரு

வரப்பில் நின்று, பயிரின் மேலாக நீண்ட கயிற்றை இழுக்கவும்.வயலில் விழுந்த புழுக்களை அழிக்க, ஏக்கருக்கு ஒரு லிட்டர் மண்ணெண்ணெயை மூன்று கிலோ மணலுடன் கலந்து வயலில் சீராக தூவவும்.இலை சுருட்டு புழுவின் தாக்குதல், பத்து சதவீதத்துக்கு அதிகமாக தென்பட்டால், அதை கட்டுப்படுத்த புரோபோனோபாஸ் என்ற மருந்தை ஏக்கருக்கு, 400 மில்லி என்ற அளவில், 200 லிட்டர் தண்ணீரில் கலந்து கைத்தெளிப்பானாக தெளிக்கவும்.குலைநோயின் சிறு புள்ளிகள் காணப்பட்டாலும், ஒரு ஏக்கருக்கு கார்பன்டசிம் 100கிராம், எடிபன்பாஸ் 200 மில்லி, பூஞ்சானக்கொல்லி மருந்துகளில் ஒன்றை, 200 லிட்டர் நீரில் கலந்து தெளிக்கவும். நீர் வடியும் வரை காத்திருக்காமல், பின்பட்ட குறுவை ரகங்களை உடனடியாக அறுவடை செய்து, கதிரடித்து தானியத்தை உலர ஏற்பாடு செய்ய வேண்டும்' என்றார்.

## <u>ரோஜாவில் டவுனியா நோய் தாக்குதல்:இலை உதிர்வதால் விவசாயிகள் கவலை</u>



ஒசூர்:ஓசூர் பகுதியில், கனமழை மற்றும் மூடுபனி காரணமாக, ரோஜா செடிகளில், டவுனியா என்ற இலை உதிரும் நோய், வேகமாக பரவி வருவதால், விவசாயிகள் கவலை அடைந்து உள்ளனர். ஓசூர் மற்றும் தேன்கனிக்கோட்டை தாலுகாவில், ஆண்டு முழுவதும் நிலவும் மிதமான தட்பவெப்ப நிலை மற்றும் நல்ல மண் வளத்தையும் பயன்படுத்தி, 4,000 ஏக்கர் பரப்பளவில், பசுமை குடில் மூலம் ரோஜா சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.மேலும், ஓசூர் அடுத்த அமுதகொண்டப்பள்ளியில் உள்ள, டான்ப்ளோரா மற்றும், 40க்கும் மேற்பட்ட தனியார் மலர் உற்பத்தி பண்ணைகளில் இருந்தும், ஆண்டு முழுவதும், ரோஜாக்கள் வெளிநாடு

களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. மேலும், தமிழகம் மற்றும் பிற மாநிலங்களுக்கும், ரோஜா மலர்கள், விற்பனைக்கு அனுப்பப் படுகிறது. இந்நிலையில், ஓசூர் பகுதியில், கடந்த ஒரு மாதமாக, கடும் குளிர் காற்று, மூடுபனி மற்றும் கனமழை பெய்து வருகிறது.அதனால், ரோஜா செடிகளில், டவுனியா என்ற நோய் வேகமாக பரவுகிறது. இந்நோய் தாக்கிய செடிகளில் உள்ளஇலைகள் முழுவதும் உதிர்ந்து, கீழே விழுந்து விடுவதால், தரமான மலர்கள் உற்பத்தியாவதில்லை. இதனால், இம்மலர்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய முடியவில்லை என, விவசாயிகள் தெரிவித்தனர்.மொட்டுகளும், செடிகளில் இருந்து உதிர்ந்து விழுகிறது. இந்நோய் முற்றிய செடிகள், முற்றிலும் கருகி நாசமடைந்து வருகிறது. ஓசூர் அடுத்த பாகலுார், பேரிகை பகுதியில், ரோஜா தோட்டங்களில், டவுனியா நோய் தாக்கம் அதிகரித்து வருகிறது. குறிப்பாக, திறந்தவெளி ரோஜா சாகுபடியில், டவுனியா நோய் தாக்குதல் அதிகமாக உள்ளது. இதுகுறித்து, சிறு விவசாயிகள் சங்க நிர்வாகி பாலசிவபிரசாத் கூறியதாவது:ரோஜாக்கள் விலை வீழ்ச்சியடைந்துள்ள நிலையில், நவம்பர் மாதம் முகூர்த்த நாள் அதிகளவில் வருவதால், விலை உயரும் என, எதிர்பார்த்தோம். ஆனால், தற்போது டவுனியா நோய் தாக்கி வருவதால், வரும், நான்கு மாதங்களுக்கு, ரோஜாக்கள் சாகுபடி பாதிக்கப்படும்.அதனால், விவசாயிகள், மிகவும் கவலையில் உள்ளனர். தற்போது, டவுனியா நோய் தாக்குதல் இருந்தபோதிலும், கனமழை மற்றும் மூடுபனி அதிகளவு உள்ளதால், நோயின் தாக்குதல், மேலும் அதிகரிக்கும் வாய்ப்புள்ளது.இவ்வாறு, அவர் கூறினார்.

## <u>நீர்ப்பாசன முறைகள் குறித்து விவசாயிகளுக்கு திறனாக்க பயிற்சி</u>

சின்னமண்டலி: நீர்ப்பாசன முறைகள் குறித்து, விவசாயிகளுக்கு திறனாக்க பயிற்சி நடந்தது. திருவள்ளூர், பொதுப்பணி நீர்வளத்துறை மற்றும் கொசஸ்தலை ஆறு வடிநிலக் கோட்டம் திருத்தணி உபகோட்டத்தின் கீழ், ஏரி நீரினை பயன்படுத்துவோருக்கு, ஒரு நாள்

திறனாக்க பயிற்சி முகாம், பேரம்பாக்கம் அடுத்த, சிறுமண்டலி கிராமத்தில் நடந்தது. முகாமிற்கு, ஏரி நீரினை பயன்படுத்துவோர் சங்க களாம்பாக்கம் தலைவர் பன்னீர்செல்வம் முன்னிலை வகித்தார். நீர்வள, நிலவள திட்டத் தின் செயற்பொறியாளர் அசோகன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு பயிற்சி அளித்தார். பயிற்சியில், நீரின் அவசியம் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது. இதில், களாம்பாக்கம், சின்னமண்டலி கிராமத்தைச் சேர்ந்த, 50க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## வேளாண் சங்கத்தில் ரூ.70 லட்சம் மஞ்சள் ஏலம்

திருச்செங்கோடு : திருச்செங்கோடு வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், 70 லட்சம் ரூபாய்க்கு மஞ்சள் ஏலம் நடந்தது. திருச்செங்கோடு வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், நேற்று முன்தினம், நடந்த ஏலத்தில், விரலி ரகம், குவிண்டாலுக்கு, அதிகபட்சமாக, 8,199, குறைந்தபட்சமாக, 5,649 ரூபாய், கிழங்கு மஞ்சள், அதிகபட்சமாக, 6,389, குறைந்தபட்சமாக, 4,798 ரூபாய்க்கு ஏலம் போனது.பனங்காலி ரகம், அதிக பட்சமாக, 10,189, குறைந்தபட்சமாக, 8,500 ரூபாய்க்கு ஏலம் போனது. மொத்தமாக, ஒரே நாளில், 1,800 குவிண்டால் மஞ்சள் விற்பனை ஆனதில், 70 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது.

## தொடர் மழை: காடையம்பட்டி ஏரி நிரம்பியது

பவானி : பவானி யூனியனுக்கு உட்பட்ட பல்வேறு பகுதிகளில் உள்ள சிறிய, பெரிய நீர் நிலைகள் நிரம்பி இருப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். பவானி தாலுகாவில் சில கிராமங்களை தவிர பிற பகுதிகளில் விவசாயம், அதனை சார்ந்த தொழில் பிரதானமாக உள்ளது.இப்பகுதி விவசாயிகளுக்கு ஒருபுறம் காவிரி,மறுபுறம்

பவானியும் ஓடி, நீர் தேவையை பூர்த்தி செய்கிறது.கடந்த சில நாட்களாக பவானி மற்றும் சுற்று வட்டார பகுதியில் மழை கொட்டி தீர்த்ததால் மழை நீர் பெருக்கெடுத்தது. கடந்த சில ஆண்டுகள் இல்லாத மழையளவு பவானி தாலுகாவில் பதிவானது. மழையால் பவானி யூனியனுக்கு உட்பட்ட சிறிய, பெரிய நீர் நிலைகள் நிரம்ப துவங்கியது.இதில் பவானி-அந்தியூர் ரோட்டில் ஆண்டிகுளம் பஞ்., உட்பட்ட காடையம்பட்டி ஏரி சில ஆண்டுக்கு பின் நிரம்பியுள்ளது.ஏரியை சுற்றியுள்ள ஆயிரக்கணக்கான ஏக்கர் விவசாய நிலங்களுக்கு தேவையான தண்ணீர் கிடைத்து இருப்பதால் விவசாயிகள், கால்நடை வளர்ப்போர், மீன் பிடி தொழிலில் ஈடுபட்டுள்ளோர் நிம்மதி பெருமூச்சு விட்டுள்ளனர்.ஏரியில் அதிகளவிலான நீரை தேக்கி வைக்கும் வகையில் கோடை காலத்தில் போது தூர் வார நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறு செய்தால் மழை காலத்தில் உபரியாக செல்லும் நீரை தேக்கி வைத்து கொள்ள ஏதுவாக இருக்கும்.மேலும் ஏரியை சுற்றியுள்ள பகுதிகளில் நிலத்தடி நீர்மட்டம் உயர, குளம் குட்டைகளில் தேக்கி வைக்கப்பட்டுள்ள நீர் பெரும் பயனுள்ளதாக இருக்கும் என்று பொதுமக்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

## உழவர் சந்தைகளில் 8 லட்சத்துக்கு காய்கறிகள் விற்பனை

ஈரோடு : ஈரோடு சம்பத்நகர், பெரியார் நகர் உழவர் சந்தைகளில்நேற்று ஒரே நாளில் ரூ. எட்டு லட்சத்திற்கு மேல் காய்கறிகள் விற்பனையானது. இடைத்தரகர்கள் முறையை ஒழித்து விவசாயிகளே தாங்கள் விளைவிக்கும் காய்கறிகளை நேரடியாக விற்பனை செய்யும் லாபம் அடையும் நோக்கில் உழவர் சந்தைகள், தமிழகம் முழுவதும் துவக்கப் பட்டன. ஈரோடு சம்பத் நகர், பெரியார் நகர் ஆகிய பகுதிகளில் செயல்பட்டு வரும், உழவர் சந்தையில் நேற்று தக்காளி கிலோ ரூ. 12, கத்திரிக்காய் 50, வெண்டை 24, புடலை 20, பீர்க்கங்காய் 25, சிவப்பு முள்ளங்கி 30, வெ.முள்ளங்கி 20, குண்டு மிளகாய் 30, கொத்தவரங்காய் 18, பாகற்காய் 20, சின்ன வெங்காயம் 20 முதல் 28 வரை, பெரிய

வெங்காயம் 25 முதல் 32 வரைக்கும், சேனை 20, கேரட் 50, பீட்ருட் 45, உருளைக்கிழங்கு 40, பீன்ஸ் 60 மற்றும் முட்டைகோஸ் 13க்கும் விற்பனை செய்யப்பட்டன.சம்பத் நகர் உழவர்சந்தையில் நேற்று மொத்தம் 22,232 கிலோ காய்கறிகள், ரூ. ஆறு லட்சத்து 35 ஆயிரத்து 705க்கு விற்பனையானது. விவசாயிகள் 188 பேர் தங்கள் காய்கறிகளை விற்பனைக்காக கொண்டு வந்தனர். 3650 நுகர்வோர்கள் வந்திருந்தனர்.அதேபோன்று பெரியார் நகர் உழவர்சந்தையில் 6476 கிலோ காய்கறிகள் ரூ. ஒ லட்சத்து 71 ஆயிரத்து 390 மதிப்பில் விற்பனையானது. 60 விவசாயிகள், 1240 நுகர்வோர்கள் வந்திருந்தனர்.

## குன்னூரில் சீத்தா பழ சீசன்

குன்னூர் : குன்னூர் அரசு தோட்டக்கலை பண்ணையில் சீத்தாபழ சீசன்அதிகரித்துள்ளது. குன்னூர் அரசு தோட்டக்கலை பண்ணையில் பல்வேறு வகையிலான பழ மரங்கள் நடவு செய்யப்பட்டு, அதன் சீசன் காலங்களில் விளையும் பழங்களை ஜாம், பழரசம் தயாரித்து சுற்றுலா பயணிகளுக்கு குறைந்த விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.இந்நிலையில், "ராம்சீத்தா' என அழைக்கப்படும் சீத்தா பழ மரங்கள் இப்பண்ணையில் 20க்கு மேல் உள்ளது."மத்திய ஆப்பிரிக்காவில் தாயகமாக கொண்ட இந்த மரத்தின் தாவரவியல் பெயர் அனேனா செரிமோயா, இந்த பழம் மலேரியா, புற்றுநோய் ஆகிய வற்றை கட்டுப்படுத்துவதுடன், நோய் எதிர்ப்பு சக்தியையும் அதிகரிக்கும்' என, கூறப்படுகிறது.சீத்தா பழ கொட்டைகள் மூலம் பூச்சி கொல்லி மருந்துகளும் தயாரிக்கப்படுகிறது. தற்போது, இப்பழ சீசன் களைகட்டியுள்ளது. இப்பண்ணையில் 1 கிலோ சீத்தா பழம் 20 ரூபாய், மரக்கன்று 5 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இந்த ரக சீத்தா பழத்தை வாங்க சுற்றுலா பயணிகள் பழப்பண்ணைக்கு சென்று வருகின்றனர்.

## மல்லிகை கிலோ ரூ.500

திண்டுக்கல் : நிலக்கோட்டை பூ மார்க்கெட்டில் வரத்து குறைந்ததால், கடந்த வாரம் கிலோ ரூ.20 க்கு விற்பனையான மல்லிகை நேற்று ரூ.500 க்கு விற்பனையானது. நிலக்கோட்டை, கொடைரோடு, உசிலம்பட்டி பகுதிகளில் இருந்து நிலக்கோட்டை பூமார்க்கெட்டிற்கு மல்லிகை பூ கொண்டு வரப்படுகிறது. தினமும் 4 டன் வரை விற்பனையாகும். சீசன் முடிந்ததால் நேற்று அரை டன் மட்டுமே விற்பனைக்கு வந்தது. கல்லறை திருவிழா, முகூர்த்தம் என்பதால் பூக்களின் தேவையும் அதிகமாக இருந்தது. இதனால் கடந்த வாரம் கிலோ ரூ.20 க்கு விற்பனையான மல்லிகை நேற்று ரூ.500 க்கு விற்பனையானது. அதேபோல் திண்டுக்கல் பூ மார்க்கெட்டிலும் கடந்த வாரம் ரூ.50 க்கு விற்பனையான மல்லிகை கிலோ ரூ.500 க்கும், ரூ.600 க்கு விற்பனையான கனகாம்பரம் ரூ.800 க்கும், ரூ.80 க்கு விற்பனையான முல்லை ரூ.350 க்கும் விற்பனையானது. கிலோ ரூ.10 க்கு விற்பனையான கோழிகொண்டை ரூ.40 க்கும், ரூ.80 விற்பனையான காக்கரட்டான் ரூ.250 க்கும், ரூ.30 க்கு விற்பனையான அரளி ரூ.60 க்கும் விற்பனையாகின. ரூ.20 க்கு விற்பனையான செண்டுமல்லி ரூ.40 க்கும், ரூ.20 க்கு விற்பனையான சம்பங்கி ரூ.120 க்கும், ரூ.40 க்கு விற்பனையான செவ்வந்தி ரூ.100 க்கும் விற்பனை யாகின. பூ வியாபாரிகள் சங்க தங்கராஜ் கூறியதாவது: சீசன் முடிந்ததால் இனிவரும் வாரங்களில் மல்லிகை விலை அதிகரிக்க கூடும், என்றார்.

## விளைநிலங்களின் தன்மையில் மாற்றம் இயற்கை காளான்களுக்கு தட்டுப்பாடு

ஆண்டிபட்டி : மழைக்கால காளான்கள் வெடிப்பில்லாததால் ஆண்டிபட்டி பகுதியில் காளான் பிரியர்களுக்கு இந்த ஆண்டு ஏமாற்றம் ஏற்பட்டுள்ளது. தென் மேற்கு, வடகிழக்கு பருவ மழைக்காலங்களில்

வயல் வரப்புகள், மானாவாரி நிலங்கள், மண்வளம் மிக்க மலைசார்ந்த பகுதிகளில் காளான் வெடிப்புகள் அதிகம் இருக்கும். இயற்கையாக கிடைக்கும் காளான்களை பிடுங்கி சிலர் விற்பனை செய்தும் வந்தனர்.குறிப்பிட்ட சில இடங்களை இலக்காக வைத்து அதிகாலையில் சென்று காளான்களை சேகரித்து வருவர்.தற்போது நெடுந்தொலைவு தேடிச்சென்றாலும் காளான் அதிகம் கிடைக்காததால் பலரும் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.ரோட்டோரங்களிலும், குடியிருப்பு பகுதிகளிலும் இந்த ஆண்டு காளான் விற்பனையை காண முடியவில்லை. காளான் வரத்து குறைவு பலருக்கும் ஏமாற்றம் அளித்துள்ளது. விவசாயிகள் கூறியதாவது:கடந்த சில ஆண்டுகளாக ஆண்டிபட்டி பகுதியில் போதுமான மழை பெய்யவில்லை. இதனால் காளான் முளைப்பதும் குறைவாக இருந்தது. இந்த ஆண்டு ஓரளவு மழை கிடைத்துள்ளது. இருப்பினும் காளான் முளைப்பு இல்லை. காளான்களில் விஷ காளான்களும் உண்டு. உணவுக்கு ஏற்ற காளான்களில் நோய் எதிர்ப்பு திறன் அதிகம் இருக்கும்.சுவை அதிகம் உள்ள இயற்கை காளான் பலருக்கும் பிடிக்கும்.விளை நிலங்களில் செயற்கை உரம், பூச்சி மருந்துகள் அதிகம் பயன்படுத்தப்படுகிறது. இதனால் மண்ணின் தன்மை மாறி காளான் வெடிப்பு குறைந்து விட்டது.தற்போது காளான் கிலோ 400 ரூபாய் வரை விலை போகிறது. பணம் கொடுத்தாலும் காளான் கிடைப்பது அரிதாகி விட்டது.

## <u>விவசாயிகளுக்கு நீண்ட கால கடன் வழங்க முன்னுரிமை</u>

தேனி : விவசாயிகளுக்கு நீண்ட கால கடன் வழங்க முன்னுரிமை வழங்க வேண்டும் என வங்கியாளர்கள் கூட்டத்தில் தகவல் தெரிவிக்கப்பட்டது. தேனி கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில் வங்கியாளர்கள் கூட்டம் கலெக்டர் பழனிசாமி தலைமையில் நடந்தது. கலெக்டர் கூறியதாவது: மாவட்டத்தில் 2015-16 நிதியாண்டிற்கு முன்னுரிமை துறைகளுக்கு 3,680 கோடி ரூபாய் கடன் வழங்க வாய்ப்பு உள்ளது. இதில் வேளாண்மை

துறைக்கு கடன் வழங்கிட அதிக முக்கியத்துவம் வழங்கப்பட உள்ளது. தோட்டக்கலை பயிர், வேளாண்மை இயந்திரமயமாக்கல், கால்நடை பராமரிப்பு கடன்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.நீண்ட கால கடன்கள் அதிகம் வழங்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. நிதியாண்டிற்கான கடன்கள் வழங்குவதற்கான திட்ட அறிக்கை கையேட்டை கலெக்டர் பழனிசாமி வெளியிட்டார்.ரிசர்வ் வங்கி உதவிப் பொது மேலாளர் ராம்குமார் பெற்றுக்கொண்டார். கூட்டத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் முருகேசன், வங்கியாளர்கள் பங்கேற்றனர்.

**<u>"மா' ஒட்டு ரகம் விற்பனை அமோகம்</u>**

பெரியகுளம் : பெரியகுளம் அரசு தோட்டக்கலைப் பண்ணையில் "மா ரகங்களின் தங்கம்' என அழைக்கப்படும் "அல்போன்சா' மா ஒட்டு ரகம் விற்பனை களை கட்டியுள்ளது. பெரியகுளம் பகுதியில் பரவலாக மழை பெய்துள்ள நிலையில், பழக்கன்றுகள் மற்றும் மரக்கன்றுகள் விற்பனை அதிகரித்துள்ளது.பெரியகுளத்தில் இருந்து 4 கி.மீ., தூரத்தில், அரசு தோட்டக்கலைப்பண்ணை உள்ளது. விவசாயிகளுக்கு தேவையான 19 வகையான கன்றுகள் இங்கு இருப்பில் உள்ளன. தோட்டக்கலைத் துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மூலமாகவும் வினியோகம் செய்யப்படுவதாக தோட்டக்கலைப்பண்ணை நிர்வாகம் தெரி வித்துள்ளது. மா நெருக்கு ஒட்டு ரகமான "மா ரகங்களின் தங்கம்' என்றழைக்கப்படும் அல்போன்சா, பங்கனபள்ளி, இமாம்பசன்ட் மற்றும் கல்லாமை, காசா கன்று ஒன்று 50 ரூபாயாகவும், மா மென்தண்டு ஒட்டு செடிகளான அல்போன்சா, பங்கனபள்ளி, இமாம்பசன்ட், காசா, செந்தூரம், ருமானி கன்று ஒன்று 36 ரூபாயாகவும், பெருநெல்லி ஒட்டு ரகம் 25 ரூபாயாகவும் ஆகவும் விற்கப்படுகிறது. சப்போட்டா ஒட்டு,மாதுளை பதியன், எலுமிச்சை, பப்பாளி, வீரிய பப்பாளி நாற்றுகள், புளி ஒட்டு, பலா ஒட்டு, விதையில்லாத நாவல் ஒட்டு, சவுக்கு,இலவம்,

தேக்கு, கறிவேப்பிலை, மல்லிகை, வேப்பம், புங்கன் கன்றுகள் மற்றும் அலங்கார செடி வகைகளும் விற்பனைக்கு தயாராக உள்ளது.5 ரூபாயில் இருந்து 50 ரூபாய் வரையிலும் கன்றுகள் விற்கப்படுவதாக தோட்டக்கலை அலுவலர் ஆறுமுகம் தெரிவித்துள்ளார்.

**<u>25 ஆண்டுகளுக்கு பின் நிரம்பிய பெரியதேவி கண்மாய்</u>**

தேவாரம் : தேவாரம் பெரம்புவெட்டி புலத்தில் பெய்த தொடர் மழையால் 1989க்கு பின் பெரியதேவி கண்மாய் முழுமையாக நிறைந்துள்ளது. தேவாரம் பெரிய தேவி கண்மாய் 60 ஏக்கர் பரப்பில் பரந்து விரிந்துள்ளது. கண்மாயில் நிறையும் நீரால் ஆயக்கட்டுதாரர்களும்,இறவை பாசன விவசாயிகளும் பயனடைவார்கள். தேவாரம் பெரம்புவெட்டி புலத்தில் பெய்யும் மழைநீர் இந்த கண்மாய்க்கு நீராதாரமாக உள்ளது.கடந்த சில நாட்களாக இப்பகுதியில் தொடர் மழை பெய்தது. சாரலாக பெய்யும் மழை அவ்வப்போது பலத்த மழையாகவும் பெய்தது.பெரம்புவெட்டி காட்டாற்று ஓடையில் ஏற்பட்ட வெள்ள பெருக்கால் கண்மாய் முழுமையாக நிறைந்துள்ளது.கண்மாய் பாசன விவசாயிகள் சங்க தலைவர் ஜெயராமன் கூறுகையில், ""கடந்த 1989ம் ஆண்டு இப்பகுதியில் பெய்த பலத்த மழையால் இந்த கண்மாய் முழு கொள்ளளவை எட்டியது. 25 ஆண்டுகள் கழித்து தற்போது காட்டாற்று வெள்ளத்தால் கண்மாய் நிறைந்துள்ளது.வெளிநாட்டு பறவைகள் 50க்கும் மேற்பட்டவை கண்மாய்க்கு வந்துள்ளன. நீண்ட இடைவெளிக்கு பின் கண்மாய் நிறைந்தது மகிழ்ச்சியளிக்கிறது,'' என்றார்.

**<u>நெல் விவசாயிகளுக்கு வேளாண் உதவி இயக்குனர் "அட்வைஸ்'</u>**

பரமக்குடி : பரமக்குடி வேளாண் உதவி இயக்குனர் கண்ணையா கூறியதாவது: பரமக்குடி சுற்று வட்ட பகுதியில் நெல் விதையானது பல இடங்களில் 20 முதல் 25 நாள் பயிராக உள்ளது. பயிர் எண்ணிக்கை பராமரிப்பதன் மூலம், அதற்கு தேவையான நீர், சூரிய ஒளி மற்றும் சத்துக்கள் தடையின்றி கிடைக்கும். பயிர் எண்ணிக்கை அதிகமானால்,

சூரிய ஒளி, சத்துக்களுக்கு போட்டி ஏற்படும். அதனால் சிம்புகள் குறைந்தும், பூச்சி நோய் தாக்குதல் உண்டாகி மகசூல் குறைய வாய்ப்புள்ளது.எனவே, குறுகிய கால நெல் ரகத்திற்கு வரிசைக்கு வரிசை 15 செ.மீ., மற்றும் பயிருக்கு பயிர் 10 செ.மீ., இடைவெளி இருக்க வேண்டும். மண் பரிசோதனை செய்து அதனடிப்படையில் உரமிட்டால், அதன் தேவை குறைவதுடன், செலவு குறைந்து, நிலத்தின் தன்மை பாதுகாக்கப்படும். நெல் பயிர் முளைத்த 20 முதல் 25 நாளில் ஏக்கருக்கு 44 கிலோ யூரியா இடலாம். இது போன்ற முறைகளை பின்பற்றுவதின் மூலம் விவசாயிகளுக்கு நல்ல மகசூல் கிடைக்க வாய்ப்புள்ளது, என்றார்.

## <u>ஆனைக்குட்டம் அணையில் 18 அடி தண்ணீர் நிரம்பியது</u>

விருதுநகர் : தொடர் மழை காரணமாக விருதுநகர் மக்களின் குடிநீர் ஆதரமாக விளங்கும் ஆனைக்குட்டம் அணையில் முழு கொள்ளவான 21 அடியில், 18 அடி வரை தண்ணீர் நிரம்பியுள்ளது. இதனால் விவசாயிகள், பொதுமக்கள் மகிழ்ச்சியில் உள்ளனர். வடகிழக்கு பருவமழை காரணமாக மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக தொடர் மழை பெய்து வருகிறது. இதனால் பிளவக்கல், கோவிலாறு அணையில் நீர் வரத்து அதிகரித்துள்ளது. நேற்றைய நிலவரப்படி, ஆனைக்குட்டம் அணையில் 18 அடி (21 க்கு), கோவிலாறு நீர் தேக்கத்தில் 28.38 அடி (42.5க்கு), பிளவக்கலில் 41.57 அடி (47.5 க்கு) தண்ணீர் தேங்கியுள்ளது. சிவகாசி மற்றும் சுற்று வட்டாரப்பகுதி, மேற்கு தொடர்ச்சி மலை பகுதியிலிருந்து தொடர் தண்ணீர்வரத்து ஆனைக்குட்டம் அணைக்கு அதிகரித்துள்ளது. இதனால், அர்ச்சுணா நதி குறுக்கே கட்டப்பட்ட தடுப்பணை நிரம்பி மறுகால் தண்ணீர் செல்கிறது. இதில் உபரியாக செல்லும் தண்ணீரை சுக்கிலார்பட்டியில் உள்ள கோடை கால பம்பிங் ஸ்டேஷனுக்கு பம்பிங் செய்யும் பணியில் விருதுநகர் நகராட்சியினர் ஈடுபட்டுள்ளனர். அதேபோல், இங்கு விருதுநகர் குடிநீர் தேவைக்காக தோண்டப்பட்ட 13

கிணறுகளில் நீர் மட்டம் உயர்ந்துள்ளது. இதை தொடர்ந்து ஆனைக்குட்டம் அணை பகுதியை நகராட்சி தலைவர் சாந்தி, உதவி பொறியாளர் தனபாண்டியன் பார்வையிட்டனர்.ஸ்ரீவில்லிபுத்தூர்: ஸ்ரீவில்லிபுத்தூரில் கடந்த சில நாட்களாக வடகிழக்கு பருவமழை பெய்து வருகிறது. இதனால் இங்குகிராமப்புற கண்மாய்களில் தண்ணீர் ஓரளவு பெருகியுள்ளது. ஆனால் நகர் புற கண்மாய்களான திருமுக்குளம், பெரியகுளம், வடமலைக்குறிச்சி கண்மாய் உட்பட பல கண்மாய்கள் பெருகவில்லை. இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு 7.30 மணிக்கு பெய்ய துவங்கிய மழை நள்ளிரவு 2 மணி வரை நீடித்தது. இதனால் மக்கள் அக்கண்மாய்களுக்கு தண்ணீர் வந்து விடும் நினைத்தனர். ஆனால் நகரில் பெய்த மழை மேற்கு தொடர்ச்சி மலை பகுதியில் பெய்யாததால் ஸ்ரீவில்லிபுத்தூர் நகர் புற கண்மாய்களுக்கு தண்ணீர் பெருகாத நிலையால் மக்கள் ஏமாற்றமடைந்துள்ளனர். நேற்று காலை 8.30 மணிப்படி ஸ்ரீவில்லிபுத்தூரில்(மி.மீ.,) 130 , வத்திராயிருப்பு 22, பிளவக்கல் 38, கோவிலாறு மழை பதிவானது.

## அணைகளுக்கு நீர்வரத்து அதிகரிப்பு

நாகர்கோவில் : குமரி மாவட்டத்தில் ஒரு சில பகுதிகளில் மழை பெய்தது. மலையோர பகுதிகளிலும் மழை பெய்து வருவதால் பேச்சிப்பாறை, பெருஞ்சாணி அணைகளுக்கு வரக்கூடிய நீர்வரத்து இரு மடங்கு உயர்ந்துள்ளது. இதனால் அணைகளின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. 48 அடி கொள்ளளவு கொண்ட பேச்சிப்பாறை அணை நீர் மட்டம் இன்று காலை 41.15 அடியை எட்டியது. அணைக்கு 776 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது.பெருஞ்சாணி அணை நீர்மட்டம் 68.70 அடியாக இருந்தது. அணைக்கு 615 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. அணையில் இருந்து 650 கனஅடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. பேச்சிப்பாறை, பெருஞ்சாணி, சிற்றாறு, மாம்பழத்துறையாறு அணைகளை பொதுப்பணித்துறை அதிகாரிகள் 24 மணி நேரமும்

கண்காணித்து வருகிறார்கள்.மாவட்டத்தில் உள்ள 1,500-க்கும் மேற்பட்ட குளங்கள் நிரம்பி வழிகிறது. இதனால் விவசாயிகள் கும்பப்பூ சாகுபடியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். தேரூர், சுசீந்திரம், ஈத்தங்காடு, அஞ்சுகிராமம், பூதப்பாண்டி, தெரிசனங்கோப்பு பகுதிகளில் நடவு பணி தீவிரமாக நடந்து வருகிறது.

# தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**காரீப் பருவ சாகுபடி அதிகரிப்பு**



புதுடெல்லி: நடப்பு (2014-2015) காரீப் பருவத்தில் நாடு முழுவதும் அக்டோபர் 31ம் தேதி வரையிலான கணக்கின்படி 443.99 லட்சம் ஹெக்டேரில் நெல், மக்காசேளம், எண்ணெய்வித்துக்கள் மற்றும் தானிய வகை பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. கடந்த 2013&2014ம் ஆண்டில், இந்த சாகுபடி 436.52 கோடியாக இருந்தது என்று மத்திய வேளாண்மைத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள புள்ளிவிவரத்தில் சுட்டிகாட்டப்பட்டுள்ளது.

**திருச்செங்கோட்டில் மஞ்சள் குவிண்டால் 10,200க்கு விற்பனை**



திருச்செங்கோடு: நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோட்டில் வேளாண் உற்பத்தியாளர்கள் விற்பனை சங்கத்தில் நேற்று மஞ்சள் ஏலம் நடந்தது. இதில் ஆத்தூர், கெங்கவல்லி, கூகையூர், கள்ளக்குறிச்சி, பொம்மிடி, அரூர், ஜேடர்பாளையம், பரமத்திவேலூர், நாமக்கல், மேட்டூர், பூலாம்பட்டி ஆகிய பகுதிகளிலிருந்து விவசாயிகள் மஞ்சளை விற்பனைக்கு கொண்டு வந்தனர். மொத்தம் 1,800 மூட்டை மஞ்சள், டெண்டர் மூலம் ^70 லட்சத்திற்கு விற்பனையானது. விரலி ரகம் குவிண்டாலுக்கு ^5,649 முதல் ^8,199 வரை விற்பனையானது. கிழங்கு ரகம் ^4,798 முதல் ^6,389 வரை விற்பனையானது. பனங்காளி ரகத்திற்கு ^8,500 முதல் 10ஆயிரத்து 189 வரை விலை கிடைத்தது விற்பனை சங்க நிர்வாகிகள் கூறினர்.

## <u>வான்மழை வாழ வைத்தது நெல் சாலையில் குவிந்தது மாவட்ட விவசாயிகள் மகிழ்ச்சி</u>

சின்னமனூர், : தேனி மாவட்டத்தில் கொட்டி தீர்த்த மழையால் விவசாய பணிகள் தீவிரமடைந்துள்ளன. கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் முதல்போக அறுவடை முடிந்து விவசாயிகள் நெல்லை சாலையில் கொட்டி வைத்துள்ளனர். இதனால் தேசிய நெடுஞ்சாலையாக மஞ்சள் சோலையாக மாறி உள்ளது. கம்பம் பள்ளத்தாக்கில் முல்லை பெரியாற்று பாசனம் மூலம் சுமார் 15 ஆயிரம் ஏக்கர் பரப்புள்ள நிலங்களில் இருபோக நெல் சாகுபடி நடந்து வருகிறது. பெரியாறு அணையில் இருந்து முதல்போக பாசனத்திற்கு கடந்த ஜூன் 1ம் தேதி தண்ணீர் திறந்து விடப்பட்டது. விவசாயிகளும் நாற்றங்கால் பாவி நடவு செய்து அறுவடைக்கு தயாராயினர். தீபாவளி முடிந்த நிலையில் கடந்த சில நாட்களாக அறுவடை தீவிரமாக நடந்து வருகிறது. இதனால் கம்பம் பள்ளத்தாக்கிலுள்ள தேசிய நெடுஞ்சாலைகளில் நெல்மணிகளை கொட்டி வைத்துள்ளனர். வியாபாரிகள் முற்றுகையிட்டுள்ளதால் சாலையே கொள்முதல் சாலையாக மாறி உள்ளது. இந்த மாதம் முழுவதும்

அறுவடை களை கட்டும். பல பகுதிகளில் அறுவடை முடிந்து இரண்டாம் போக பணி துவங்கி உள்ளது. தற்போது, தேனி பகுதியில் நெல் அறுவடை பணி நடந்து வருகிறது. நெல் அறுவடை செய்ய போதிய கூலியாட்கள் கிடைக்காததால், செயின் மூலம் அறுவடை செய்யும் இயந்திர வாகனம் மூலமாக அறுவடை செய்ய வேண்டியுள்ளது. மிக குறைவான எண்ணிக்கையிலே உள்ளதால், அறுவடை இயந்திரம் கிடைக்காமல் விவசாயிகள் அவதியடைந்து வருகின்றனர். தேவதானப் பட்டி: கடந்த 3 ஆண்டுகளாக தேவதானப்பட்டி மஞ்சளாறு பகுதி, பெரியகுளம் வராகநதி பாசனம் மூலம் வடுகபட்டி, மேல்மங்கலம், ஜெயமங்கலம், சில்வார்பட்டி, பொம்மிநாயக்கன்பட்டி, குள்ளப்புரம், அ.வாடிப்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் சுமார் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏக்கர் பரப்புள்ள நிலங்கள் தரிசுகளாக மாறியது. இதனால் விவசாயிகள் கடும் அவதியடைந்தனர். இந்த ஆண்டு பருவமழை பெய்து வரும் நிலையில் மஞ்சளாறு அணை 3 ஆண்டுகளுக்கு பின் முழுகொள்ள ளவான 57 அடியை தொட்டது. தொடர்ந்து மழை பெய்து வந்ததால் அணையில் இருந்து வரும் நீரை வெளியேற்றினர். இதனால் தேனி, திண்டுக்கல் மாவட்டங்களில் அணையை நம்பியுள்ள 9 கண்மாய்கள் நிரம்பின. இது தவிர மஞ்சளாறு அணை மூலம் தேனி மாவட்டத்தில் 3,148 ஏக்கர், திண்டுக்கல் மாவட்டத்தில் 2,111 ஏக்கர் பரப்பு நிலங்கள் விவசாய பணிகளுக்கு தயாராகி வருகின்றன. இதுதவிர பெரியகுளம் வராகநதி மூலம் மேல்மங்கலம், ஜெயமங்கலம், சில்வார்பட்டி, பொம்மிநாயக்கன்பட்டி, குள்ளப்புரம், அ.வாடிப்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் சுமார் 6 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏக்கர் பரப்புள்ள நிலங்களில் விவசாய பணிகள் தீவிரமடைந்துள்ளது. இந்த ஆண்டு தொடர்ந்து மழை பெய்யும் என விவசாயிகள் நம்பிக்கை தெரிவிக்கின்றனர்.

## நிலத்தடி நீர்மட்டம் உயரும்

தேனி, : தேவாரம் காட்டாற்று ஓடைகளில் அதிக மதிப்பிலான இயற்கையின் வரப்பிரசாதமாக உள்ள மணல் குவிந்து கிடக்கிறது. இதனை வெளிமார்க்கெட்டில் அள்ளி விற்பனை செய்து லாபம் பார்க்கும் மணல் கொள்ளையர்களை ஒடுக்க பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. தற்போது பெய்யக்கூடிய மழையால் சதுரங்கப்பாறை, சாக்குலூத்துமெட்டு, பெரம்புவெட்டி ஓடை உள்ளிட்ட பகுதிகளை சுற்றிலும் குவிந்து கிடக்கும் மணலை பாதுகாக்கவும், இயற்கை வளம் கொள்ளை போகாமல் இருக்க கலெக்டர் பழனிசாமி எடுத்த நடவடிக்கையால் நிலத்தடி நீர்மட்டம் உயரக்கூடிய வாய்ப்புகள் உருவாகி உள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

## திருச்சுழி பகுதியில் புழுக்களால் அழிந்து வரும் உளுந்து, பாசிப்பயறு பயிர்கள்

திருச்சுழி, : திருச்சுழி பகுதியில் ஆயிரக்கணக் கான ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ள உளுந்து, பாசிப் பயறு போன்ற பயிர்கள் புழுக்கள் தாக்குதலால் நாசமாகி வருகின்றன. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். விருதுநகர் மாவட்டம், திருச்சுழி பகுதியிலுள்ள எம். ரெட்டியபட்டி, சிலுக்கு பட்டி, மண்டபசாலை, வட க்குநத்தம் ஆகிய கிராமங்களில் உளுந்து, கம்பு, பாசிப்பயறு, மக்காச்சோளம் போ ன்ற பணப்பயிர்கள் ஆயிரக்கணக்கான ஏக்கரில் பயிரிட ப்பட்டுள்ளன. இந்நிலையில், ஆயிரக்கணக்கான ஏக்கரில் பயிரிடப்பட்ட பாசிப்பயிறு, உளுந்து போன்ற பயிர்கள் புழுக்க ளின் தாக்குதலால் அழியத் தொடங்கின. இதனால் விவசாயிகள் மிகவும் மனவேத னை அடைந்துள்ளனர். எனவே உடனடியாக சம்பந்தப்பட்ட வேளாண் அதிகாரிகள் நேரில் வந்து ஆய்வு நடத்தி புழுக்களை ஒழிக்க ஆலோசனை வழ ங்க கோரிக்கை என கோ ரிக்கை விடுத்துள்ளனர். இது குறித்து மண்டபசாலையை சேர்ந்த ஜெய பால் என்ற விவசாயி கூறியதாவது; கடந்த 5 ஆண்டுகளுக் கும் மேலாக முற்றிலும் மழை

பொய்த்ததால் விவ சாயம் செய்ய முடியாமல் தவித்தனர். தற்போது பருவ மழை பெய்தது விவசாயிக ளுக்கு மகிழ்ச்சியளிக்கின் றது. இருப்பினும் பாசிப்பயிறு, உளுந்து போன்ற பயிர்களில் கடந்த 20 நாட்களாக புழுக்கள் உருவாகி நாசம் செய்து வருகின்றன. இதனால் ஏராளமான ஏக்கரில் பயிரிடப்பட்ட பாசிப்பயிறு மற்றும் உளுந்து பயிர் கள் முற்றிலும் நாசமடைந்து வருகிறது இவ்வாறு அவர் கூறினார்.

**<u>தொடர் மழையால் திருமுக்குளத்தில் 3 ஆண்டுக்கு பிறகு தண்ணீர் வரத்து அதிகரிப்பு</u>**

திருவில்லிபுத்தூர், : திருவில்லிபுத்தூரில் தொடர் மழையால் திருமுக்குளத்தில் 3 ஆண்டுகளுக்கு பிறகு தண் ணீர் தேங்கியுள்ளது. நிலத்தடி நீர்மட்டம் உயர வாய்ப்புள்ளதால் பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். விருதுநகர் மாவட்டம், திருவில்லிபுத்தூர் நகரின் மையபகுதியில் அமைந்துள்ளது ஆண்டாள் கோவிலுக்கு சொந்தமான திருமுக்குளம். இந்த குளத்தில் நீர் இருந்தால் நகரில் நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்து நன்றாக இருக்கும். ஆனால் கடந்த பல ஆண்டுகளாக தொடர் மழையின்மை காரணமாகவும் இந்த குளம் தண்ணீர் இன்றி வறண்டு போய் இருந்தது. இதனால் நகர் பகுதியில் நிலத்தடி நீர் மட்டம் மிகவும் பாதிக்கப்பட்டது. திருவில்லிபுத்தூர் பகுதியில் கடந்த சில தினங்களாக பெய்துவரும் பரவலான மழையினால் 3 ஆண்டுகளுக்கு பிறகு திருமுக்குளத்தின் இரண்டு மடைகளில் தண்ணீர்வந்து கொண்டிருக்கிறது. தொடர்ந்து மழை பெய் தால் மூன்று மடைகளிலும் தண்ணீர் வரும் வாய்ப்பு உள்ளது. இதனால், நிலத்தடி நீர் மட்டம் உயர வாய்ப்புள்ளது. 3 ஆண்டுகளுக்கு பின்னர் மடைகளில் தண்ணீர் வருவது திருவில்லிபுத்தூர் மக்களை மகிழ்ச்சி அடைய செய்துள்ளது.

## இன்றைய வேளாண் செய்திகள்

**முல்லைப்பெரியாறு அணை நீர்மட்டம் 137 அடியாக உயர்வு வைகை அணைக்கு கூடுதல் தண்ணீர் திறப்பு**



குமுளி, முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டம் 137 அடியாக உயர்ந்ததையடுத்து, வைகை அணையின் நீர்மட்டத்தை உயர்த்துவதற்காக கூடுதல் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. 137 அடியாக உயர்ந்தது. முல்லைப்பெரியாறு அணையின் நீர்மட்டம் தொடர் மழை காரணமாக 'கிடுகிடு'வென உயர்ந்து வருகிறது. அணையின் நீர்மட்டம் நேற்று 137 அடியாக உயர்ந்தது. அணைக்கு வினாடிக்கு 2,494 கன அடி தண்ணீர் வருகிறது. அணையில் இருந்து வினாடிக்கு 1,756 கன அடி வீதம் தண்ணீர் திறந்து விடப்படுகிறது. வழக்கமாக 456 கன அடி தண்ணீர்தான் திறந்துவிடப்படும். தற்போது அணையின் நீர்மட்டம் வேகமாக உயர்ந்து வருவதால் கூடுதல் தண்ணீர் திறந்து விடப்படுகிறது. வைகை அணைக்கு முல்லைப்பெரியாறு அணை தண்ணீரை கொண்டு வைகை அணையின் நீர்மட்டத்தை உயர்த்த தமிழக அதிகாரிகள் முடிவு செய்தனர். அதன்படி முல்லைப்பெரியாறு அணையில் இருந்து நேற்று முதல் கூடுதல் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. இந்த தண்ணீர் வருவதால் வைகை அணை நீர்மட்டம் வேகமாக உயர்ந்து வருகிறது. 71 அடி உயர வைகை அணையின் நீர்மட்டம் நேற்று 52.82 அடியாகஇருந்தது.

அச்சப்படதேவையில்லை

முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டம் உயர்ந்து வருவதால் இடுக்கி மாவட்ட மக்கள் அச்சத்தில் இருப்பதாக கூறப்படுகிறது. இதையடுத்து கேரள மாநில தலைமை செயலாளர் பத்மபூஷன் முல்லைப் பெரியாறு அணையை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். பின்னர் அவர் கூறும்போது, ''முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டம் உயர்ந்து வருவது குறித்து யாரும் அச்சப்படத் தேவையில்லை. அணையில் உள்ள 13 மதகுகளில் ஒரு மதகு பழுதடைந்துள்ளது. அணையில் லேசான நீர்க்கசிவும் ஏற்பட்டுள்ளது. இதை வல்லுனர்களை கொண்டு ஆய்வு செய்ய வேண்டும். பழுதான மதகை தமிழக அரசு உடனடியாக சீரமைக்க வேண்டும்'' என்றார்.

## <u>பெரியநாயக்கன்பாளையம் வாரச்சந்தையில் தக்காளி வரத்து குறைவால் விலை உயர்வு</u>



பெரியநாயக்கன் பாளையம் வாரச்சந் தையில் தக்காளி வரத்து குறைவால் விலை உயர்ந்து உள்ளது. தக்காளி விலை உயர்வு கோவை அருகே உள்ள பெரியநாயக்கன்பாளையம் வாரச்சந்தை வாரத்தில் ஞாயிற்றுக்கிழமை மட்டும் செயல்படுவது வழக்கம். இந்த சந்தைக்கு மேட்டுப்பாளையம், ஊட்டி, குன்னூர், மைசூர் மற்றும் பெரியநாயக்கன் பாளையம் மற்றும் அதை சுற்றியுள்ள கோவனூர், நாயக்கன்பாளையம், செல்வ புரம், காளிபாளையம், வெள்ளமடை ஆகிய பகுதிகளில் இருந்து தக்காளி, கத்திரிக்காய், கேரட், வெண்டைக்காய், உருளை கிழங்கு உள்பட பல்வேறு காய்கறிகள் விற்பனைக்காக கொண்டு வரப்படுகின்றன. இந்த நிலையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை என்பதால் சந்தை நடைபெற்றது. சந்தையில் கடந்த வாரம் 9 கிலோ

கொண்ட ஒரு கூடை தக்காளி ரூ.70 முதல் ரூ.80 வரை விற்பனை ஆனது. ஆனால் இந்த வாரம் ஒரு கூடை தக்காளி ரூ.120 முதல் ரூ.150 வரை விற்பனை ஆனது. தக்காளி விலை உயர்ந்ததால் வியாபாரிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

காய்கறிகள்விலைவிபரம்

மழையால் ஒரு சில பகுதிகளில் தக்காளிகள் செடி யிலேயே அழுகி போனதால், வழக்கத்தை விட சந்தைக்கு தக்காளி வரத்து குறைந்து இருந்தது. இதனால் வரத்து குறைவு காரணமாக கடந்த வாரத்தை விட விலை அதிக மாக இருந்ததாக வியாபாரிகள் தெரிவித்தனர்.பெரியநாயக் கன்பாளையம் வாரச்சந்தை யில் நேற்று விற்பனையான காய்கறிகளின் விலை ஒரு கிலோ விபரம் வருமாறு:- பெரியவெங்காயம் ரூ.35, சின்னவெங்காயம் ரூ.40, கத்திரிக்காய் ரூ.40, வெண்டைக்காய் ரூ.40, உருளைகிழக்கு ரூ.30, கேரட் ரூ.60, பீன்ஸ் ரூ.46, பீட்ரூட் ரூ.27, பீர்க்கன்காய் ரூ.24, பாகற்காய் ரூ.24, பூசணிக்காய் ரூ.14, முள்ளங்கி ரூ.26, முருங்கைக்காய் ரூ.50, 3 தேங்காய்கள் ரூ.50

## மாவட்டம் முழுவதும் பரவலாக மழை அதிகபட்சமாக அண்ணாமலைநகரில் 48 மில்லி மீட்டர் பதிவு



கடலூர் மாவட்டத்தில் பரவலாக மழை பெய்தது. அதிகபட்சமாக சிதம்பரம் அண்ணாமலைநகரில் 48.60 மில்லி மீட்டர் பதிவானது.

பருவமழை

வடகிழக்கு பருவமழை தீவிரம் அடைந்து வருகிறது. இதை அடுத்து வங்கக்கடலில் உருவான குறைந்த காற்றழுத்ததாழ்வு நிலையின் காரணமாக கடலூர் மாவட்டத்திலும் பரவலாக மழை பெய்தது. அதிலும்

குறிப்பாக கடலோர கிராமங்களில் கனமழை கொட்டியது. இதனால் குடியிருப்பு பகுதிகளை சுற்றியும், விளைநிலங்களையும் மழைநீர் சூழ்ந்தது. ஆனால் கடந்த ஒருவார காலமாக மழை பெய்யவில்லை. மாறாக வெயில் அடித்தது. இதனால் குடியிருப்பு, விவசாய நிலங்களில் குளம்போல தேங்கி நின்ற தண்ணீர் வடிய தொடங்கியது. இந்த நிலையில் தென் வங்க கடல் பகுதியின் மத்திய பகுதியில் புதிய குறைந்த காற்றழுத்த தாழ்வுநிலை உருவாகி இருப்பதால் தமிழகத்தின் கடலோர மாவட்டங்களில் சில இடங்களில் மிதமான மழை பெய்யும், ஓரிரு இடங்களில் கன மழையும் பெய்வதற்கு வாய்ப்பு இருப்பதாக வானிலை ஆய்வு மையம் அறிவித்தது. வியாபாரிகள் பாதிப்பு

அதன்படி, மாவட்டத்தின் தலைநகரான கடலூரில் நேற்று முன்தினம் காலையில் வெயில் அடித்தது. பின்னர் இரவு 7 மணிக்கு திடீரென மழை பெய்ய தொடங்கியது. பலத்த மழையாக பெய்யாவிட்டாலும் நேற்று காலை வரையில் விட்டு, விட்டு மழை தூறிக்கொண்டே இருந்தது. இதனால் பாதசாரிகளும், வாகன ஓட்டிகளும் தலையில் தொப்பி அணிந்தும், குடை பிடித்துக்கொண்டும் சென்றதை பார்க்க முடிந்தது. சாலையோர வியாபாரிகள் கொட்டும் மழையில் குடை பிடித்துக்கொண்டும், மழைகோட்டு அணிந்தும் வியாபாரம் செய்தனர். காலை 10 மணிக்கு பிறகு மழை இன்றி வானம் இருள் சூழ்ந்து காணப்பட்டது. கடலூர் உழவர் சந்தையில் பொது மக்கள் கையில் குடைபிடித்தபடி காய்கறிகள் வாங்கி செல்வதையும் காணமுடிந்தது. ஆனால் மாவட்டத்தின் பிற பகுதிகளான சிதம்பரம், பரங்கிப்பேட்டை, அண்ணாமலைநகர், கொத்தவாச்சேரி, புவனகிரி, குப்பநத்தம், விருத்தாசலம் ஆகிய பகுதிகளில் பலத்த மழை பெய்தது. இதனால் சாலை மற்றும் தெருக்களில் பெருக்கெடுத்து ஓடிய மழைநீர் தாழ்வான பகுதிகளில் குளம்போல தேங்கி நின்றது.

மழைஅளவு

நேற்று காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில்

அதிகபட்சமாக அண்ணாமலைநகரில் 48.60 மில்லி மீட்டரும், குறைந்த பட்சமாக எட்டையாபுரத்தில் 3 மில்லி மீட்டர் மழையும் பதிவானது. சராசரியாக 20.78 மில்லி மீட்டர் பதிவானது. மாவட்டத்தின் பிற இடங்களில் பெய்துள்ள மழை அளவு விவரம் மில்லி மீட்டரில் வருமாறு:-

கொத்தவாச்சேரி -46

பரங்கிப்பேட்டை -44

சிதம்பரம் -43

புவனகிரி -30

குப்பநத்தம் -28.20

சேத்தியாத்தோப்பு -23

வேதநத்தம் -20

வைப்பார் -20

விருத்தாசலம் -20

கழுகுமலை -19

ஸ்ரீமுஷ்ணம் -19

கடலூர் -18.90

பெலாந்துறை -16

காட்டுமன்னார்கோவில் - 14

வானமாதேவி -12.40

லால்பேட்டை -11.50

வேப்பூர் -11

கடல்குடி -11

சூரங்குடி -10

லக்கூர் -9.20

கீழ்செருவாய் - 7

காட்டுமயிலூர் -7

பண்ருட்டி -6

தொழுதூர் -5.60

## <u>சிவகாசியில் 1½ மணி நேரம் பலத்த மழை</u>

விருதுநகர் மாவட்டம் முழுவதும் கடந்த சில நாட்களாக தொடர்ச்சியாக மழை பெய்து வருகிறது. இதனால் மாவட்டம் முழுவதும் பல்வேறு இடங்களில் அணைகள், குளங்கள், கண்மாய்கள் நிரம்பி வருகிறது. இந்த நிலையில் நேற்று இரவு சிவகாசி மற்றும் திருத்தங்கல் பகுதியில் பலத்த மழை பெய்தது. அதிக வேகத்தில் மழை பெய்ததால் சாலைகளில் இரு சக்கர வாகனங்கள் செல்ல முடியவில்லை. ஒரு சில கனரக வாகனங்கள் மட்டும் சென்றது. சிவகாசியில் பல இடங்களில் சாலைகளில் மழை தண்ணீர் வெள்ளம் போல் பெருக்கெடுத்து ஓடியது. இடி–மின்னலுடன் பெய்த மழையால் இரவு முழுவதும் குளிர்ந்த காற்று வீசியது. இந்த மழை இரவு 8 மணி முதல் 9½ மணி வரை பெய்தது. மழை பெய்த போது மின்சாரம் துண்டிக்கப்பட்டது. இதனால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

## <u>பூண்டி ஏரியில் இருந்து புழல் ஏரிக்கு கூடுதல் தண்ணீர் திறப்பு</u>



பூண்டி ஏரியில் இருந்து புழல் ஏரிக்கு கூடுதல் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளதை படத்தில் காணலாம்.

ஊத்துக்கோட்டை, பூண்டி ஏரியில் இருந்து புழல் ஏரிக்கு கூடுதலாக தண்ணீர்திறக்கப்பட்டுள்ளது.

<u>பூண்டி ஏரி</u>

ஊத்துக்கோட்டை அருகே உள்ள பூண்டியில் சத்தியமூர்த்தி நீர் தேக்கம் உள்ளது. இங்கு கிருஷ்ணா நதிநீர் மற்றும் மழைநீர் சேமித்து வைக்கப்படுகிறது. தேவைப்படும் போது பூண்டி ஏரியில் இருந்து புழல்

ஏரிக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டு சென்னையில் குழாய்கள் மூலம் குடிநீர் வினியோகிப்பது வழக்கம். பூண்டி நீர்தேக்கத்தில் நீர்மட்டம் குறைந்ததால் ஆந்திர மாநிலம் நெல்லூர் அருகே உள்ள கண்டலேறு அணையில் இருந்து பூண்டி ஏரிக்கு தண்ணீர் திறந்து விடும்படி தமிழக பொதுப்பணித்துறை அதிகாரிகள் கடந்த மாதம் கோரிக்கை விடுத்தனர்.

<u>தண்ணீர் திறப்பு</u>

இதை ஏற்று ஆந்திர அதிகாரிகள் கண்டலேறு அணையில் இருந்து கடந்த மாதம் 14–ந்தேதி மாலை பூண்டி ஏரிக்கு தண்ணீர் திறந்து விட்டனர். வினாடிக்கு 1,000 கனஅடி வீதம் கிருஷ்ணா கால்வாயில் தண்ணீர் திறக்கப்படுகிறது. பூண்டி ஏரியின் உயரம் 35 அடி. நேற்று காலை 8 மணிக்கு 20.32 அடி தண்ணீர் மட்டம் பதிவானது. 281 மில்லியன் கனஅடி தண்ணீர் இருப்பு உள்ளது. ஏரிக்கு கிருஷ்ணா நதிநீர் வினாடிக்கு 138 கனஅடி வீதம் வந்து கொண்டிருக்கிறது.

<u>கூடுதல் தண்ணீர்</u>

இது மட்டுமல்லாமல் மழைநீர் வினாடிக்கு 23 கனஅடி வீதம் வந்து கொண்டிருந்தது. பூண்டி ஏரியில் இருந்து புழல் ஏரிக்கு இத்தனை நாட்களாக வினாடிக்கு 150 கனஅடி வீதம் தண்ணீர் திறந்து விட்டனர்.
தற்போது கிருஷ்ணா நதிநீர் சீராக வந்து கொண்டிருப்பதால் நேற்று முன்தினம் முதல் புழல் ஏரிக்கு திறந்துவிடும் தண்ணீ£ அளவு அதிகரிப்பட்டுள்ளது. அதாவது தற்போது வினாடிக்கு 210 கனஅடி வீதம் தண்ணீர் திறந்து விடப்படுகிறது. கடந்த 14–ந் தேதி பூண்டி ஏரியில் நீர்மட்டம் 18.65 அடியாகவும், வெறும் 148 மில்லியன் கனஅடி நீர் மட்டும் இருப்பு இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

## <u>உடுமலை உழவர் சந்தையில் அக்டோபர் மாதம் ரூ.1¼ கோடிக்கு காய்கறிகள் விற்பனை</u>

உடுமலை உழவர் சந்தையில் கடந்த அக்டோபர் மாதம் ரூ.1¼ கோடிக்கு காய்கறிகள் விற்பனையானது.

உழவர் சந்தை

உடுமலை கபூர்கான் வீதியில் உள்ள உழவர் சந்தையில் கடந்த அக்டோபர் மாதம் விவசாயிகள் 6 லட்சத்து 5 ஆயிரத்து 125 கிலோ காய்கறிகளை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். இந்த காய்கறிகள் ரூ.1 கோடியே 22லட்சத்து 65 ஆயிரத்து 311–க்கு விற்பனையானது. 2ஆயிரத்து 241 விவசாயிகள் கொண்டு வந்திருந்த காய்கறிகளை 86 ஆயிரத்து 439 பொதுமக்கள் (நுகர்வோர்) வாங்கி பயனடைந்தனர்.

கடந்த செப்டம்பர் மாதம் 2ஆயிரத்து 158 விவசாயிகள் கொண்டு வந்திருந்த 5 லட்சத்து 84 ஆயிரத்து 840 கிலோ காய்கறிகள் ரூ.1 கோடியே 28 லட்சத்து 54 ஆயிரத்து 390–க்கு விற்பனையானது. இந்த காய்கறிகளை 83 ஆயிரத்து 862 பேர் வாங்கி பயனடைந்தனர். கடந்த செப்டம்பர் மாதத்தை விட அக்டோபர் மாதம் 20 ஆயிரத்து 285 கிலோ காய்கறிகள் கூடுதலாக விற்பனைக்கு வந்திருந்தது. அதே சமயம் காற்கறிகள் விலை ஏற்றத்தாழ்வு காரணமாக விற்பனை தொகை செப்டம்பர் மாதத்தை விட அக்டோபர் மாதம் ரூ.5 லட்சத்து 89 ஆயிரத்து 79 குறைவாக இருந்தது. செப்டம்பர் மாதத்தை விட அக்டோபர் மாதம் காய்கறிகள் வாங்க வந்த பொதுமக்களின் எண்ணிக்கை 2ஆயிரத்து 577 அதிகரித்து இருந்தது.

காய்கறிகள் விலை

உடுமலை உழவர் சந்தையில் நேற்று ஒரு கிலோ தக்காளி ரூ.8 முதல் 13 வரைக்கும், கத்தரிக்காய் ரூ.17 முதல் ரூ.32 வரைக்கும், வெண்டைக்காய் ரூ.18 முதல் ரூ.20 வரைக்கும், சின்ன வெங்காயம் ரூ.20 முதல் ரூ.37 வரைக்கும், பெல்லாரி வெங்காயம் ரூ.18 முதல் ரூ.30 வரைக்கும், கேரட் ரூ.36–க்கும், உருளைக் கிழங்கு ரூ.32 முதல் ரூ.34 வரைக்கும், முட்டைக்கோஸ் ரூ.10 முதல் ரூ.12 வரைக்கும், புடலங்காய் ரூ.14 முதல் ரூ.17வரைக்கும், பாகற்காய் ரூ.14 முதல் ரூ.16வரைக்கும். புஸ்பீன்ஸ்

ரூ.46–க்கும், பீர்க்கங்காய் ரூ.10 முதல் ரூ.24 வரைக்கும், பூசணிக்காய் ரூ.7–க்கும், குண்டு பச்சைமிளகாய் ரூ.18 முதல் ரூ.22 வரைக்கும், வாழைக்காய் ரூ.20–க்கும் விற்பனையானது.